**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**நாள்** 12.08.2025

**அசல் வழக்கு எண்.16/2016**

**பி.சா.1 – சரளா, க/பெ.தியாகராஜன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

இரண்டாம் வாதி அமர்நாத் உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொன்னால் என்னுடைய மகன் ஆவார். இரண்டாவது வாதிக்காகவும் நீங்களே சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து குன்றத்தூரில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே நம்பர் 862/1B ஆகும். உங்களுக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் என் மாமனார் வாயிலாக கிடைத்தது பாகப்பிரிவினை வாயிலாக கிடைத்தது. என்னுடைய கணவர் தியாகராஜனுக்கு கிடைத்தது. உங்கள் கணவருக்கும் அவர் உடன்பிறந்தவர்களுக்கும் எப்பொழுது பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் கடந்த 1985 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை நடைபெற்றது. உங்களுக்கு அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்ன தெரியுமா என்றால் பி பட்டியல் சொத்து ஆகும். உங்கள் பாகப்பிரிவினைக்கு முன்பு உங்கள் மாமனார் கச்சாலை முதலியார் ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். உங்கள் கணவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறப்புக்கு பிறகு யாருக்கு பாகம் வந்தது என்றால் எனக்கும் என் மகனுக்கும் பாகம் வந்தது. வாரிசு அடிப்படையில் வந்தது. என்னுடைய மாமியார் செல்லம்மாள் என்பவருக்கும் பாகம் கிடைத்தது. தியகராஜன் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் வேலாயுதம், சங்கர் ஆகிய இரண்டு பேரும் என் கணவர் தியாகராஜனின் உடன்பிறந்தவர்கள் ஆவார். உங்கள் கணவர் இறந்த பிறகு வழக்கு சொத்து யார் யாருக்கு வாரிசு என்கிற அடிப்படையில் வந்தது என்றால் என்னுடைய மாமியார் செல்லம்மாள் என் மகன்கள் கோபிநாத் மற்றும் அமர்நாத் ஆகியோருக்கும் எனக்கும் வந்தது. ஆக மொத்தம் 4 பேருக்கு பாகம் வந்தது.

மாமியார் செல்லம்மாள் யாருக்கு சொத்தினை கொடுத்தார்கள் என்றால் அவர்கள் இறந்து விட்டதால் அது எங்களுக்கு தான் வந்தது. கோபிநாத்தை அதாவது உங்கள் மகனை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர் வெளிநாட்டுக்கு வேலைக்கு சென்று விட்டார் ஆகவே அவரை வழக்கில் சேர்க்கவில்லை. அவருக்கும் பாகம் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். வெளிநாட்டில் இருக்கும் அவரிடம் பொது அதிகார பத்திரம் வாங்கி நீங்கள் ஏன் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் எங்கள் பேருக்கு சொத்தினை எழுதிக் கொடுத்து விட்டார் என்ன எழுதிக் கொடுத்தார் என்றால் அவர் இல்லை என்றாலும் நாங்கள் விற்க அனுமதி வழங்கி விட்டார். அந்த பொது அதிகாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். நீங்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் அவ்வாறு எந்த ஒரு பொது அதிகார பத்திரமும் கோபிநாத் வழங்கவில்லை என்றால் சரியில்லை. கோபிநாத் பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்ததாக கூறும் நீங்கள் அதை ஏன் வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆவணம் வழக்கில் கொடுக்கப்பட்டதால் அதனை சொல்லவில்லை. வழக்கு சொத்தான 16 செண்டில் மட்டுமே பிரச்சனை உள்ளது மற்ற சொத்துக்களில் ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் மற்ற சொத்துக்களில் எந்த பிரச்சனையும் இல்லை. வழக்கு சொத்தினை நீங்கள் அனுபவித்து வருவதற்கான வருவாய் ஆவணங்கள் உங்கள் வசம் உள்ளதா என்றால் இருக்கிறது. பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. சிட்டா இருக்கிறதா என்றால் இருக்கிறது. அதனை வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்திற்கு உயில் எழுதப்பட்டுள்ளது அதனை பிரபேட் செய்ய உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயிலை பிரபேட் செய்ய உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யாமல் உயிலின் அடிப்படையில் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரி இல்லை. உங்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவினை ஆர்டிஓ கேன்சல் செய்து விட்டார் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக ரத்து செய்தார் என்றால் தெரியாது. அதற்கு மேல் அப்பீல் டிஆர்ஓ விடம் போட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த அப்பீல் மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்து உள்ளீர்களா என்றால் தெரியாது. நீங்க 2014 ஆம் ஆண்டு மேல்முறையீடு டிஆர்ஓ விடம் தாக்கல் செய்ததாக சொல்கிறீர்கள் அதன் முடிவு என்ன ஆனது என்றால் நிலுவையில் உள்ளது. உங்களுக்கு பட்டா தேவை என்பதால் நீங்கள் டிஆர்ஓ நீதிமன்றத்தை தான் அணுக வேண்டும் இந்த நீதிமன்றத்தை அணுக முடியாது என்று சொன்னால் சரி இல்லை. இந்த சிவில் நீதிமன்றத்திற்கு பட்டா வழங்க உத்தரவு போட முடியாது என்று சொன்னால் சரி இல்லை. பட்டாவிற்காக நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ராதா அம்மாள் அதாவது பிரதிவாதி எவ்வாறு சொத்து வாங்கினார் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ராதா அம்மாள் உயிருடன் இருந்த பொழுது சரசு பெயரில் தானம் எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் அது பற்றி தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியில்லை. 1976 ஆம் ஆண்டு ராதா அம்மாள் கிரயம் வாங்கினார்கள் தெரியுமா என்றால் கிரயம் வாங்கி உள்ளார்கள். அவர் அவர்கள் கிரயம் வாங்கியது எப்போது தெரியும் என்றால் 2015 ஆம் ஆண்டு தான் தெரிய வந்தது. ராதா அம்மாள் பிரதிவாதி ஒரு ஏக்கர் சொந்தம் கொண்டாடுகிறார் என்றால் சரியில்லை. 84 செண்ட் மட்டுமே பிரதிவாதிகளுக்கு சொந்தமானது ஆகும். பிரதிவாதி உங்கள் உறவுமுறை உறவினர் கிடையாது என்றால் சரிதான். சர்வே எண் 862/1A உங்களுக்கு வருமா என்றால் வரும். நீங்கள் கிரயம் வாங்கினீர்களா என்றால் நான் கிரயம் வாங்கவில்லை. உங்களுக்கு எதன் அடிப்படையில் உரிமை வருகிறது என்றால் மாமனார் பாகப்பிரிவினையில் வந்தது. பாகப்பிரிவினையில் நீங்கள் சொல்வது போல் சர்வே நம்பர் கிடையாது என்று சொன்னால் சரி இல்லை. 862/1A, 862/1B ஆகியவை பட்டா உங்கள் பேரில் உள்ளதா என்றால் கூட்டு பட்டாவில் உள்ளது. கூட்டு பட்டாவாக யார் பெயரில் இருந்தது என்றால் கச்சாலை முதலியார் பெயரில் மற்றும் தியாகராஜன் பெயரில் இருந்தது. அந்த கூட்டு பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தெரியாது. கூட்டு பட்டாவில் கச்சாலை முதலியார் மற்றும் அவரது மகன் தியாகராஜன் மற்றும் அவரது மனைவி ராதா அம்பாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு

குறிப்பிடப்பட்டுள்ளது தான் அந்த பட்டாவே தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. தியாகராஜனுக்கும் ராதா அம்மாள் என்பவருக்கும் எந்த உறவும் கிடையாது அவர் மூன்றாம் நபர் என்றால் சரிதான். கச்சாலை முதலியாரிடம் இருந்து உங்கள் கணவருக்கு அதாவது தியாகராஜனுக்கு எவ்வளவு வந்தது என்றால் மொத்தம் 4 ½ ஏக்கர் வந்தது அதில் பிரச்சனை வந்தது 43 சென்ட் வழக்கு நிலுவையில் உள்ளது 16 சென்ட் ஆகும். தற்பொழுது பயிர் வைத்துள்ளீர்களா என்றால் தற்பொழுது பயிர் வைக்கவில்லை. நாற்புர எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.